# சகோதரர் திருமாவேலன் எழுதியுள்ள நமது வரலாற்றுச் சாதனை புத்தகங்கள்!

**முதல்வர் வாழ்த்துரை...!** முதல் பக்கத் தொடர்ச்சி

எதுவுமே இல்லை. ஆனால், அவரே ஒரு புத்தகம் போடுவதைப் போல பேசி உட்கார்ந்திருக்கிறார்!

அடுத்து, பேசி இருக்கின்ற நம்முடைய ஆசிரியர் அய்யா அவர்கள் கொள்கை வகுப்பெடுத்து நூலைப் பற்றிச் சொல்லி, அடுத்து நமக்குள்ள கடமையைப் பேசி அமர்ந்திருக்கிறார்.

நூலின் அறிமுக உரையை பேசிய நம்முடைய பேராசிரியர் சுப.வீ. அவர்கள் திராவிட இயக்கத்தின் கொள்கை உறுதி தளராமல், தடம் மாறாமல், அந்தக் கொள்கைகளை வென்றெடுக்க ஆட்சி நடத்துகின்ற பெருமை தி.மு.க.வுக்குதான் இருக்கிறது என்று பெருமையாக பேசினார்!

அப்படிப்பட்ட நம்முடைய பெருமைகளை சொல்லுகின்ற புத்தகங்கள்தான் இந்த மூன்று புத்தகங்கள்! அரசியல் புரட்சியின் அடையாளமாக, ஒடுக்கப்பட்ட மக்களை உயர்த்துகின்ற கருத்தியல் தெளிவின் அடையாளமாக, திராவிட இயக்கம் இருக்கின்ற காரணத்தால்தான், ஆதிக்கவாதிகளுக்கும், அவர்களுக்கு அடிமை சேவகம் செய்பவர்களுக்கும், திராவிடம் என்றாலும், திராவிட இயக்கங்கள் என்றாலும், திராவிட முன்னேற்றக் கழகம் என்றாலும் கசக்கின்றது! மிகவும் எரிகிறது!

ஒடுக்கப்பட்டவர்கள் மேலெழுந்து வருகிறார்கள் என்றதுமே, எவ்வளவு வன்மம் வெளியே வருகிறது. வரலாற்றை சிறிது திரும்பிப் பார்த்தோம் என்றால், விமர்சனங்கள் என்ற பெயரில், எத்தனை அவதூறுகள், எவ்வளவு காழ்ப்புணர்வு.. அந்தக் காலத்தில், ”நீதிக்கட்சியை குழிதோண்டி புதைப்பேன் என்று ஒருவர் சொன்னார். ஆனால், இன்றைக்கு நிலைமை என்ன? நூறாண்டுகள் கழித்தும், நீதிக்கட்சியின் நீட்சியாக நாம், தமிழ்நாட்டு மக்களுடைய ஆதரவுடன், மக்களுக்கான பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறோம்!

**திராவிட மாடல் என்று சொன்னால் சிலருக்கு எரிகிறது! தொடர்ந்து சொல்வோம்!**

நாம் திராவிட மாடல் என்று சொல்ல, சொல்ல அவர்களுக்கு திரும்ப, திரும்ப எரிகின்றது! அவர்களுக்கு திரும்ப, திரும்ப எரியவேண்டும் என்று தான், நாமும் திரும்ப, திரும்ப திராவிட மாடல் என்று சொல்கின்றோம்!

நூறாண்டுகளுக்கு முன்பு, தமிழ்நாடு எப்படி இருந்தது; இன்றைக்கு எப்படி இருக்கின்றது? இதே காலகட்டத்தில், நாட்டின் பிற மாநிலங்கள் அடைந்திருக்கின்ற சமூக வளர்ச்சி – பொருளாதார வளர்ச்சி – உட்கட்டமைப்பு வளர்ச்சி என்ன? மற்ற எல்லோரையும் விட, அனைத்து வகையிலும் நாம் இருபது ஆண்டுகள் முன்னோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றோம்! கண்கூடாக தெரிகின்ற இந்த உண்மைகளை கூட மறைக்கலாம் என்று நினைத்து, சிலர் என்ன கேட்கிறார்கள்? ”திராவிடம் என்ன செய்தது? ”திராவிட மாடல் என்றால் என்ன? என்று கேட்கிறார்கள்! அவர்களுக்கெல்லாம், பதில் சொல்லுகின்ற வகையில், இந்த புத்தகங்களை எழுதியிருக்கிறார் நம்முடைய அருமை சகோதரர் திருமாவேலன் அவர்கள்.

ஒரு எழுத்தாளருக்கு, அதுவும், திராவிட இயக்க எழுத்தாளருக்கு இருக்க வேண்டிய உண்மையான கடமையை நம்முடைய திருமாவேலன் அவர்கள் செய்திருக்கிறார்.

2022–ல் இவர் எழுதிய, ”இவர் தமிழர் இல்லை என்றால், எவர் தமிழர்? அந்த நூலை நான் வெளியிட்டபோது சொன்னேன், ”திராவிட இயக்கத்தின் வரலாறு, இந்த சாதனைகள் குறித்து தொடர்ச்சியாக எழுதவேண்டும் என்று சொன்னேன். அந்தக் கடமையை செய்திருக்கின்ற அவருக்கு என்னுடைய மனதார பாராட்டுக்கள்! வாழ்த்துகள்! இதையெல்லாம் உணர்வோடு வருகிறது என்று அதை நிரூபித்திருக்கக்கூடிய வகையில் ஒரு தமிழ்க்குடும்பத்தை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது!

**தமிழ்க் குடும்பத்துக்கு சொந்தக்காரர் திருமாவேலன்!**

இவருடைய தந்தை பெரும்புலவர் படிக்கராமு அவர்களை பற்றி உங்களுக்கெல்லாம் நிச்சயம் தெரிந்திருக்கும்! திருக்குறள் நெறி பரப்ப, தன்னையே ஒப்படைத்துக் கொண்டவர் அவர்! அதனால்தான், இந்த ஆண்டிற்கான திருவள்ளுவர் விருதை அவருக்கு நாங்கள் வழங்கினோம்! இப்படிப்பட்ட, தமிழ்க்குடும்பத்தை, எழுத்துக் குடும்பத்தை சேர்ந்த திருமாவேலன் அவர்கள், கலைஞர் செய்திகள் தொலைக்காட்சிக்கு தலைமைப் பொறுப்பில் இருந்து, சிறப்பாக செயல்பட்டு வருகிறார்; ஏன், முரசொலி நாளேட்டிலும் பங்களிக்கிறார்.

பொதுவாக, மீடியாவில் இருப்பவர்கள், அதிலும் நியூஸ் சேனலில் இருப்பவர்கள், எப்படிப்பட்ட பரபரப்பான சூழலில் இருப்பார்கள் என்று நமக்கு தெரியும்! பிரேக்கிங் நியூஸ் எடுக்கின்ற பரபரப்பிலேயும், தன்னுடைய எழுத்துப்பணிக்கு பிரேக் எடுக்காமல், இப்படிப்பட்ட நூல்களை படைப்பதற்காகவே திருமாவேலன் அவர்களை நான் மனதார பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

இன்றைக்கு வெளியிடப்பட்டிருக்கின்ற இந்த நூல்களைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால், முதலில், தீரர்கள் கோட்டம் திமுக! இந்தப் புத்தகத்தை எழுதுவதற்காக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதன்மைத் தொண்டனாக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்!

பேரறிஞர் அண்ணா உருவாக்கி, அரை நூற்றாண்டு காலம் தலைவர் கலைஞர் அவர்கள் வழி நடத்திய இயக்கம் இந்த இயக்கம், பவளவிழா கண்டிருக்கக்கூடிய காலகட்டத்தில் நான் தலைவர் பொறுப்பில் இருக்கிறேன். வெள்ளிவிழா – பொன்விழா – பவளவிழா என்று தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம், நிச்சயம் நூற்றாண்டு விழா காலத்திலும், ஆட்சிப் பொறுப்பிலிருந்து, தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லும்! அதற்கான வலிமை, கோடிக்கணக்கான உடன்பிறப்புகளுக்கு இருக்கிறது!

கடுமையான எதிர்ப்புகளை எல்லாம் வென்று, நெருப்பாற்றில் நீந்தி, அண்ணாவின் தம்பிகளாக, தலைவர் கலைஞரின் உடன்பிறப்புகளாக, கட்டுக்கோப்பாக இருக்கின்ற இந்த இயக்கத்தை, ”தீரர்கள் கோட்டம் என்று சொல்லாமல், வேறு என்னவென்று சொல்வது? உழைப்பை மட்டுமல்ல; உயிரையே கொடுத்தவர்களால் உருவாக்கப்பட்ட இயக்கம், இந்த இயக்கம்!

**தி.மு.க.வின் வரலாறு போராட்டம் சிறை – தியாகம் என்பதுதான்!**

அந்த தியாக வரலாற்றை, கண்ணீர் வரவழைக்கக்கூடிய அந்த தியாகிகளின் வரலாற்றை, இன்றைய இளைய தலைமுறையினர் நிச்சயம் அறிந்து கொள்ள வேண்டும்! தி.மு.க என்றால், என்னவென்று ஹிஸ்டரியை திரும்பி பார்த்தீர்கள் என்றால், போராட்டம்! போராட்டம்! போராட்டம்! சிறை! சிறை! சிறை! தியாகம்! தியாகம்! தியாகம்! – இதுதான் தி.மு.க.!

இந்தித் திணிப்புக்கு எதிரான போர்க்களம் – எல்லை மீட்பு போர்க்களம் – எமெர்ஜன்சி கொடுமைகள் – எதேச்சாதிகார அடக்குமுறைகள் என்று நம்முடைய மண் – மொழி – மானம் காக்க தி.மு.க. எதிர்கொண்ட வலிகள் மிகவும் பெரியது! அத்தனையும் கடந்து, ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருப்பதற்கு காரணம், தொண்டர்கள் தான்!

அரசியலில், பலரும் சொகுசை எதிர்பார்த்து வருவார்கள் ஆனால், தி.மு.க.வுக்கு அந்த சொகுசு கிடையாது! சில இயக்கங்களைப் பார்த்தீர்கள் என்றால், சிறிய எஃப்.ஐ.ஆர். பதிவானாலே, கட்சிவிட்டு கட்சி தாவுவார்கள்! ஆனால், கொடூரமான அடக்குமுறைகளை எதிர்கொண்டு, அவதூறுகளையும், பழிச்சொற்களையும், வன்மத்தையும் தாங்கி, கருப்பு, சிவப்புதான் உயிர்மூச்சு, அண்ணாவும், கலைஞரும் சொன்ன கொள்கைகள்தான் கட்டளை என்று இலட்சியத்திற்காக வாழ்கின்றவர்கள் தான், நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் உடன்பிறப்புகள்! இந்த வலிகளை எல்லாம், பட்டியலிட்டு, பதிவு செய்துள்ளதால்தான், ”தீரர்கள் கோட்டம் – தி.மு.க.–வை, தியாகப் புத்தகம் என்று சொன்னேன்!

அடுத்து, திராவிட அரசியல் – திராவிட அரசு இயல்! வரலாற்றின் குப்பைத் தொட்டியில், எத்தனையோ இயக்கங்கள் தூக்கி எறியப்பட்டிருக்கிறது! ஆனால், எதிர்ப்பாளர்களை எல்லாம் குப்பைத் தொட்டியில் எறிந்து, கோட்டையைப் பிடித்த இயக்கம் என்றால், அது திராவிட இயக்கம் தான்!

**காலங்கள் மாறுகிறது! எதிரிகளும் மாறுவார்கள்! தி.மு.கழகம் கம்பீரமாக நிலைத்து நிற்கிறது!**

நிறைய பேர் என்னிடம் கேட்பார்கள். ”இவ்வளவு அவதூறுகளை, தரம் தாழ்ந்த வசவுகளை எப்படி எதிர்கொள்கிறீர்கள் என்று கேட்பார்கள் அதற்கு என்னுடைய பதில் என்னவென்றால், இவைகள் எல்லாம் எங்களுக்கு புதிதா? இன்றைக்கு நேற்றா பார்க்கிறோம்! பேரறிஞர் அண்ணா சொன்ன வழியில், ”வாழ்க வசவாளர்கள் என்று தமிழ்ச் சமுதாயத்தை முன்னேற்றுவதற்கான நம்முடைய வேலையை பார்த்துக் கொண்டிருக்கிறோம்! அதனால்தான், காலங்கள் மாறுகிறது! எதிரிகள் மாறுவார்கள்! ஆனால், தி.மு.க. மட்டும் கம்பீரமாக நிலைத்து நிற்கிறது!

காலந்தோறும் உருவாகின்ற அரசியல் எதிரிகளை சிங்கிள் ஹேண்டில் எதிர்கொண்டு, நூற்றாண்டை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம்! நாம் சூரியனைப் போல, நிரந்தரமான ஒளியை வழங்கிக் கொண்டே இருக்கவேண்டும்! இதைத்தான் ‘திராவிட அரசியல் – திராவிட அரசு இயல்’ புத்தகம் சொல்கின்றது.

**கழக ஆட்சியால் ஏற்பட்ட வளர்ச்சியை ஆதாரத்துடன் காட்டும் திருமாவேலன் புத்தகங்கள்!**

தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு பெயர் – தமிழுக்கு, செம்மொழி தகுதி – சமூகநீதி கருத்தியலை காப்பது – தமிழ்நாட்டின் வளர்ச்சியை திட்டங்களால் சாத்தியப்படுத்துவது – ஏராளமான கல்வி நிலையங்களை உருவாக்குவது என்று சொல்லித் தீராத சாதனைகளுக்கு சொந்தமான இயக்கம், நம்முடைய இயக்கம்! நீதிக்கட்சி காலத்திலிருந்து, அதன் நீட்சியான நம்முடைய திராவிட மாடல் அரசு வரைக்குமான சாதனைகளின் வரலாற்றுக் கருவூலமாக இந்தப் புத்தகத்தை உருவாக்கியிருக்கிறார்!

கண் முன்னால் ஏற்பட்டிருக்கின்ற வளர்ச்சியைக் கூட காணப் பிடிக்காமல், கண்மூடி குற்றம் சாட்டுகிறவர்களுக்கு, ”இதோ ஆதாரம்! இப்போதாவது படியுங்கள் என்று திருமாவேலன் இந்தப் புத்தகத்தை நமக்கு எழுதியிருக்கிறார்.

வரலாற்று அறிவும் – திராவிடப் பற்றும் – மொழித் திறனும் உள்ள ஒருவரால்தான், இப்படிப்பட்ட நூலை எழுத முடியும்! இது எல்லாவற்றிலும், தான் தேர்ந்தவர் என்று நம்முடைய திருமாவேலன் அவர்கள் நிரூபித்திருக்கிறார்!

அடுத்து, மூன்றாவது புத்தகமான, முறை செய்து காப்பாற்றும் முதலமைச்சர்! இந்தப் புத்தகத்தை பற்றி, நான் சொல்வதைவிட நீங்கள் வாங்கி படித்து, பொதுவெளியில் பேசவேண்டும்! நம்முடைய ஆட்சி, அனைவருக்குமான ஆட்சியாக, எப்படி சிறப்பாக செயல்படுகிறது என்று சொன்னார்களே,

- **அன்புப் பத்து**
- **அறிவுப்பத்து**
- **மகளிர் பத்து**
- **உழவர் பத்து**
- **இளையோர் பத்து**
- **திராவிடப் பத்து**
- **தமிழ் இனப் பத்து**
- **எழுந்தது பத்து**
- **தமிழ் மொழிப் பத்து**

ஏற்றப்பத்து என்று அருமையாக எழுதியிருக்கிறார்!

**நமது ஆட்சியின் டைரியாக விளங்கும் புத்தகம்!**

மொத்தத்தில், திராவிட மாடலை சுருக்கமாக அவர் கொடுத்திருக்கிறார்! இதை புத்தகம் என்று சொல்வதைவிட, நம்முடைய ஆட்சியின் டைரி என்று சொல்லலாம்!

இந்தப் புத்தகத்தை, மானமிகு ஆசிரியர் அவர்கள் வெளியிட, நம்முடைய திராவிட ஆழ்வார் பெற்றுக் கொண்டுள்ளார்! இதையும் திருமாவேலன் காரணத்தோடு தான் செய்திருப்பார் என்று நினைக்கிறேன். இது எல்லோருக்குமான ஆட்சி என்று காட்ட இப்படி செய்திருப்பார் என்று நினைக்கிறேன்

கடந்த வாரம், விமான நிலையத்திற்கு எதிரே உள்ள தமிழ்நாடு ஹஜ் இல்லத்திற்கு நான் அடிக்கல் நாட்டினேன். அடுத்த சில நாட்களில் மனிதநேய மகத்துவத்தை சொல்கின்ற கிறிஸ்துமஸ் விழாவில் பங்கேற்றேன். மறுநாள், திருநெல்வேலி மாவட்ட அரசு விழாவில், நெல்லையப்பர் திருக்கோயில், வெள்ளித்தேர் வரும் ஜனவரியில் மீண்டும் ஓடும் என்று அறிவித்தேன்! இதுதான் திராவிட மாடல்! இதனால்தான் நம்மை எப்படி கார்னர் செய்வது என்று தெரியாமல் எதிரிகள் புலம்புகிறார்கள்!

இங்கே வந்திருக்கின்ற உங்களுக்கும், இந்தப் புத்தகங்களை வாங்கக் கூடியவர்களுக்கும் நான் வைக்கின்ற வேண்டுகோள் என்னவென்றால், ”புத்தகம் என்பது அறிவாயுதம்! பயன்படுத்தாமல் விட்டால் ஆயுதம் துருப்பிடித்துவிடும்!

அதேபோல, புத்தகங்களையும் அலங்காரத்திற்காக அலமாரியில் வைக்காமல் தினமும் எடுத்து வாசிக்கவேண்டும்! அப்போதுதான், நம்முடைய மூளையும் துருப்பிடிக்காமல் இருக்கும். புதிய சிந்தனைகள் பிறக்கும்! இன்றைக்கு முப்பது செகண்ட்ஸ் ரீல்ஸ் வீடியோவை கூட முழுவதும் பார்க்காமல் ஸ்கிப் செய்கின்ற அளவுக்கெல்லாம் வேகமாக சென்று கொண்டிருக்கிறது!

**புத்தகவாசிப்புதான் மனதை ஒருமுகப்படுத்தும் மெடிடேஷன்!**

இந்த Addiction–னால் எந்த விஷயத்திலும், ஆழ்ந்து கவனம் செலுத்த முடியாமல் இளைஞர்கள் தவிக்கிறார்கள். ஆனால், Good Things Take Time என்று அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்! இது போன்ற சூழ்நிலையில், புத்தக வாசிப்புதான் மனதை ஒருமுகப்படுத்துகின்ற மெடிடேஷன்! அதனால், நீங்கள் எவ்வளவு பிசியான வேலையில் இருந்தாலும், ஒரு நாளைக்கு அரை மணி நேரம் அல்லது 15 நிமிடமாவது புத்தகங்களை வாசியுங்கள்! உங்களைப் பார்த்து வீட்டில் உள்ள குழந்தைகளும் இதை ஃபாலோ செய்வார்கள். பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் தான் எக்சாம்பிளாக இருக்கவேண்டும்!

மாவட்டந்தோறும் புத்தகத் திருவிழாக்கள், ஜனவரியில் நான் தொடங்கி வைக்க இருக்கின்ற சென்னை புத்தகக் கண்காட்சி, அண்மையில், இளைஞரணிச் செயலாளர் உதயநிதி நடத்திய அறிவுத்திருவிழா, இது எல்லாமே ஆழ்ந்த வாசிப்பை நோக்கி இளைஞர்களை நகர்த்துகின்ற முயற்சிகள்தான்!

நம்முடைய அறிவுப் பாரம்பரியம் தொடரும் வரை, ஆரிய ஆதிக்கவாதிகள், வந்த வழி மறந்த அடிமைகள், அறிவற்ற அரைகுறைகள் என்று யாரும் இந்த ஆலமரத்தை அசைத்துப் பார்க்க முடியாது! இங்கே அறிவுத்தீ அணையாமல் இருப்பதால்தான் நம்முடைய ஊரில், கலவரத்தீயை பற்ற வைக்க முடியவில்லை! வாசிப்பும், வளர்ச்சியும் ஒன்றோடொன்று தொடர்புடையது! அதை உணர்ந்து, காலத்திற்கேற்ற கருத்து ஆயுதங்களை கூர்தீட்டிக் கொடுக்கக்கூடிய திருமாவேலன் அவர்களை மீண்டும் பாராட்டி, திராவிடம் எனும் அறிவொளி இயக்கத்தால் நிமிர்ந்த தமிழ்நாடு ஒருநாளும் தலைகுனியாது! பாசிசவாதிகளின் பகல்கனவு இங்கு பலிக்காது! வரலாற்றைப் படிப்போம்! தொடர்ந்து வரலாறு படைப்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்கள்.

---

தமிழ்நாட்டின்

# பள்ளிக் கல்வித்துறைக்கான நிதியை முறையாக வழங்குக!

## மாநிலங்களவையில் - கழக உறுப்பினர் பி.வில்சன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச. 23 –

இந்தியா முழுவதும் உள்ள சுமார் 98 லட்சம் ஆசிரியர்களின் பணி மற்றும் பதவி உயர்வைப் பாதுகாக்கவும், ஒன்றிய அரசு தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வித்துறைக்கு வழங்காமல் புறக்கணித் துவரும் நிதியை முறையாக வழங்கவும், 12 ம் வகுப்பு வரை இலவசக் கல்வியை அரசியலமைப்பு உரிமையாக மாற்றவும் நாடாளுமன்றத்தில் கழக மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் எம்.பி. வலியுறுத்திப் பேசினார்.

அவர் பேசியது வருமாறு:

அரசியலமைப்பின் சரத்து 21ஐ திருத்தி, மூன்று முதல் ஆறு வயது வரையிலான அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாய ஆரம்பகால குழந்தை பருவ பராமரிப்பு, கல்வி மற்றும் அனைத்து குழந்தைகளுக்கும் சமமான முழுமையான ஆரம்பகால குழந்தைப் பருவ ஆதரவு கிடைப்பதை உறுதி செய்யும் சரத்து 21Bஐ அறிமுகப்படுத்தும் தனிநபர் தீர்மானம் வரவேற்கத்தக்கது.

இதனை அரசியலமைப்பின் சரத்து 21 A ஐ திருத்துவதன் மூலமும் மேற்கொள்ள முடியும்.

ஒரு உன்னதமான நோக்கத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 21, இந்திய ஒன்றியத்தின் புதிய கொள்கையின் காரணமாக 6 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குக் கூட பயனற்றதாக மாற்ற முயற்சி க்கப்படுகிறது. பிரிவு 21 இந்த நாட்டில் அது இயற்றப்பட்டதன் உண்மையான அர்த்தத்தைப் பெறுகிறதா என்றால் அது கேள்விக்குறியே!

இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனிடமிருந்தும் ஒன்றிய அரசானது 4% செஸ் வரியை ஆரோக்கியம் மற்றும்



கல்விக்காக வசூலிக்கிறது. இந்த நிதி, இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான அடிப்படை உரிமையான சரத்து 21 Aன் கீழ் உள்ள திட்டங்களுக்காக மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்போது இந்த நிதி அர்த்தமுள்ள வகையில் செலவிடப்படுகிறதா என்று பார்ப்போம். ஒன்றிய அரசின் சர்வ சிக்ஷா அபியான் திட்டமானது இந்த செஸ் தொகையிலிருந்து தான் நிதியளிக்கப்படுகிறது.

இது தொண்டோ அல்லது விருப்புரிமையோ அல்ல.. மாறாக இது அரசியலமைப்புக் கடமையாகும்..

ஆனால், அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்குப் பதிலாக, ஒன்றிய அரசு இந்த நாட்டின் குழந்தைகளுக்குச் சொந்தமான சமக்ரா சிக்ஷா அபியான் நிதியில் இருந்து 3,548.22 கோடியைத் தமிழ்நாட்டிற்கு நிறுத்தி வைத்து, தமிழ்நாட்டை தண்டிப்பதற்கான ஒரு வழியைத் தேர்ந்தெடுத்துள்ளது.

எந்த அடிப்படையில் இது நியாயமாகும்?

மக்கள் மன்றத்தின் ஆய்வுக்காக ஒருபோதும் முன்வைக்கப் படாத, மாநில அரசுக்கு ஒவ்வாத தேசிய கல்விக்கொள்கையை ஏற்றுக்கொள்ளாததால் தமிழ்நாடு போன்றதொரு மாநிலத்திற்கு இழைக்கப்படும் அநீதியா இது?

இருமொழிக் கொள்கையை மட்டுமே கொண்டுள்ள தமிழ்நாடு போன்றதொரு மாநிலத்தை இது கட்டுப்படுத்துமா?

இதுதான் கூட்டாட்சித்தத்துவம் செயல்படக்கூடிய முறையா?

ஒன்றிய அரசின் கொள்கைகளுக்கு எதிரான மாநில அரசின் எதிர்ப்பு என்பது, மாநில அரசின் பள்ளி கல்வியை ஒன்றிய அரசானது நிதி ரீதியாக மட்டுப்படுத்துவதற்கும், குழந்தைகளின் அடிப்படை உரிமைகளை மறுப்பதற்கும் ஒரு காரணமாக அமையுமா?

ஒன்றிய அரசின் இத்தகைய நிதி நிறுத்தி வைப்பினால்

தமிழ்நாட்டில் 44 லட்சம் மாணவர்களும் 2.2 லட்சம் ஆசிரியர்களும் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாநிலங்களின் ஒன்றியமாக உள்ள இந்தியத் திருநாட்டில் இது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

நாட்டில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் 98 லட்சம் ஆசிரியர்கள் வேலை இழக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அரசியலமைப்பின் சரத்து 21A உருவாக்கப்பட்டதன் பயனுக்கு ஊறு விளைவிக்கிறது.

சிறுபான்மையினர் அல்லாத பள்ளிகளில் பணியில் உள்ள மற்றும் ஆசிரியர்கள் தகுதித் தேர்வை ஒருபோதும் எழுதாத அனைத்து ஆசிரியர்களும், இரண்டு ஆண்டுகளுக்குள் அத்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறது. தவறினால், அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்குள் தங்கள் வேலையை இழக்க நேரிடும் என்று கூறுகிறது.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009, சுருக்கமாக RTE சட்டம் என அழைக்கப்படும் சட்டமானது, இந்த நாட்டில் உள்ள அனைத்து ஆசிரியர்களும் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறுவதைக் கட்டாயப்படுத்துகிறது.

இதன் மூலம்

ஐந்து ஆண்டுகளுக்கும் குறைவாக பணிக்காலம் எஞ்சியிருக்கும் ஆசிரியர்கள் கூட TETஇல் தேர்ச்சி பெறாவிட்டால், பதவி உயர்வு மறுக்கப்பட்டு நீக்கப்படுவார்கள்.

ஒரு நபர் பணியில் சேர்ந்த பிறகு, அவரது பதவி உயர்வுக்கான விதிகளை அரசு மாற்றும்போது, அது அந்த நபரின் சட்ட உரிமைகளைப் பாதிக்கிறது.

தமிழ்நாட்டில் மட்டும் 4,00,000 ஆசிரியர்களும், இந்தியா முழுவதும் 98,00,000 ஆசிரியர்களும் இந்தக் கொள்கையால் பாதிக்கப்பட்டு தங்கள் வேலையை இழக்கப் போகிறார்கள். அதன் அடிப்படையில், சரத்து 21A பெரும் அச்சுறுத்தலில் உள்ளது. மேலும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பள்ளிகளில் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் இருக்க மாட்டார்கள்.

இத்தகைய ஆசிரியர்கள் 2011 ம் ஆண்டு ஆசிரியர் தகுதித்தேர்வு என்ற ஒன்று அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்பில் இருந்தே சேவையாற்றியவர்கள்.. பணியில் சேரும்போது, அப்போது நடைமுறையில் இருந்த விதிகளின் அடிப்படையில், பணிமூப்பு குறித்த நியாயமான எதிர்பார்ப்புடன் சேவையில் இணைந்தவர்கள்.

இதில் குறிப்பிடப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், RTE சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 23.08.2010 தேதியிட்ட NCTE அறிவிப்பானது, 2010க்கு முந்தைய அனைத்து ஆசிரியர்களின் பணிப்பாதுகாப்பையும் உறுதி செய்தது. அந்த அறிவிப்புக்கு முன்னர் நியமி க்கப்பட்ட ஆசிரியர்களுக்கு புதிய தகுதித் தேவைகள் பொருந்தாது என்று அது தெளிவாகக் கூறியது. அந்தப் பாதுகாப்பு முழுமையான தாகவும், சந்தேகத்திற்கு இடமில்லாததாகவும் இருந்தது.

ஆனால், 2012ல் NCTE சட்டத்தில் சரத்து 12 A சேர்க்கப்பட்ட பின்னர், அது ஆர்.டி.இ சட்டத்திற்கு எதிராக ஒரு முரண்பாட்டை உருவாக்கியது. மேலும், இது முந்தைய சட்டரீதியான பாதுகாப்பை முழுவதுமாகச் செல்லாததாக்கும் வகையில் வழிவகுத்தது. இதன் விளைவாக 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள், சொல்லப்போனால் 25 ஆண்டுகளாக சேவையில் உள்ள ஆசிரியர்களை அவர்களின் பணியில் இருந்து வெளியேற வலியுறுத்தியது.

எந்தவொரு மாநிலமும் எவ்வளவு திறன் மிகுந்ததாக இருந்தாலும், இரண்டு ஆண்டுகளில் இலட்சக்கணக்கான ஆசிரியர்களுக்கு மாற்று ஆசிரியர்களை நியமிக்க முடியாது.

எந்தவொரு கல்வி அமைப்பும் இத்தகைய அதிர்ச்சியில் இருந்து சிதையாமல் மீள முடியாது.

பல ஆண்டுகளாக சேவையாற்றிய ஆசிரியர்கள், அவர்கள் பணியமர்த்தப்பட்ட போது நடைமுறையில் இல்லாத ஒரு தகுதித்தேர்வை எழுதுமாறு கட்டாயப்படுத்தப்பட்டு அவமானப்படுத்தப்படக்கூடாது. அப்படியானால் சரத்து 21A என்பது அர்த்தமற்றதாகிவிடும்.

முதலமைச்சர் அவர்கள் இது தொடர்பாக ஏற்கனவே 25.11.2025 அன்று மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியான ரூ.3,548.22 கோடி நிதியை விடுவிக்கவும், ஆசிரியர்களை பாதுகாத்திடவும் மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களின் வாயிலாக ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரை, இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான உரிமை என்பது ஆறு முதல் பதினான்கு வயது வரையிலான மாணவர்களுடன் நின்று விடக்கூடாது. ஏனெனில் சரத்து 21A விலைமதிப்புமிக்க உரிமையாகும்.

இந்த RTE சட்டம், இந்தியாவில் உள்ள அனைத்து குழந்தை களுக்கும் கல்வி கிடைக்க வேண்டும் என்பதற்காக 2009இல் கொண்டு வரப்பட்டது, அதனால்தான் சரத்து 21A கொண்டு வரப்பட்டது.

தற்போதைய சூழ்நிலையில் நான் குறிப்பிட விரும்பும் விஷயம் என்னவென்றால், ஒன்றிய அரசின் பிடிவாதத்தால் சரத்து 21A என்பது அர்த்தமற்றதாகி வருகிறது.

இந்த புதிய அரசியலமைப்பு திருத்தம் கொண்டு வருவதை நாம் பாராட்ட வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதற்கேற்ப அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும். ஆனால், இந்த கட்டாயக் கல்வி என்பது தொடக்கக் கல்வி மட்டத்துடன் மட்டும் நின்றுவிடக் கூடாது. கட்டாயக் கல்வி என்பது தொடர்ச்சி, சமத்துவம் மற்றும் தரமான பள்ளிப்படிப்பிற்கான உலகளாவிய அணுகலை உறுதி செய்யும் வகையில், 12 ஆம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவர்களையும் உள்ளடக்கும் வகையில் படிப்படியாக நீட்டிக்கப்பட வேண்டும்.


இந்த அரசியலமைப்பு உத்தரவாதத்தை விரிவுபடுத்துவது நமது மனித மூலதனத்தை வலுப்படுத்துவதற்கு மட்டுமல்லாமல், சமூக நீதியின் உணர்வை நிலைநிறுத்து வதற்கும், நவீன அறிவுசார் பொருளாதாரத்தின் சவால்களை எதிர்கொள்ள அடுத்த தலைமுறையை தயார்படுத்துவதற்கும் அவசியம். எனவே, ஒன்றிய அரசானது உறுதியாகச் செயல்பட்டு, 12 ஆம் வகுப்பு வரை இலவசக் கல்வியை அரசியலமைப்புச் சட்டத்தின் உரிமையாக மாற்ற, பிரிவு 21 B ஐ சேர்க்கும் செயல்முறையைத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பெ. ஏழுமலை
### டிசம்பர் 23 (2018)



கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் கிளைப் பிரதிநிதி, சோழவரம் ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், ஒன்றிய அவைத்தலைவர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

இரு முறை பாடியநல்லூர் ஊராட்சி மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

உயர்நிலைப் பள்ளி அமைப்புக்குழுத் தலைவர், காரனோடை அவுசிங் சொசைட்டி தலைவர் என பதவி வகித்தவர்.


கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எவரெஸ்ட் கோ.நடராசன்
### டிசம்பர் 23 (2003)



திருவண்ணாமலை மாவட்டம், போளூர் பேரூர்க் கழகச் செயலாளராக இரு முறையும் – மாவட்ட துணைச் செயலாளராக மூன்று முறையும் பொறுப்பு வகித்தவர்.

போளூர் நகர வங்கித் தலைவராகவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி எழுத்து அழிப்புப் போராட்டம், இலங்கைத் தமிழர் ஆதரவுப் போராட்டம், சட்ட நகல் எரிப்புப் போராட்டம் என கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**